49 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு

“ சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே ”


வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா $4\frac{1}{2}$ ரூபா

ACC-No-10813.

ஆசிரியா :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 22-5-33

காதல் மயக்கம்



பர்தாப் பெண்மணி | போர்வையை எடுத்த பின்

—*Courtesy National Call.*

‘ கூட்டுக் கமிட்டி ’ என்ற பெயரைக் கேட்டு காதல் கொண்டு விழுந்தடித்துக் கொண்டு ஸப்ரூக்கூட்டம் சீமைக்கு ஓடிற்று. பர்தாவிலுள்ள உருவத்தை ‘மானே ! தேனே !’ யென்று பலவிதமாக புகழ்ந்தனர். கூட்டுக் கமிட்டியின் நிஜஸ்வருபத்தைக் கண்டவுடன், “ சீக்கிரம் ஊருக்குத் திரும்புவோம் ” என்று சொல்கின்றார்களாம். இப்படி ஓர் மயக்கமா ?

"நாம்கே வாஸ்தே அரசு"

'நாம்கே வாஸ்தே ராஜாங்க'மென்றால் பெயரில் மட்டும் அரசாங்கமேயன்றி சக்தியொன்றுமில்லாதது என்று அர்த்தம். இந்தியர்களிடம் அரசாட்சியைத் தந்துவிட்டால் உடனே பிரிட்டிஷ் அரசு 'நாம்கே வாஸ்தே' ராஜாங்கமாகிவிடுமென்று சர்ச்சில் என்ற வாயாடி பிரிம்ரோஸ் சங்கக் கூட்டத்தில் அலறியிருக்கின்றான். அவன் சொல்வதாவது:—

"பேருக்கு மட்டும் பிரிட்டிஷ் அரசு இருப்பதாகவும் ஆனால் அரசாங்க உத்யோகங்களை நடத்துபவர் இந்தியர்களாயுமிருந்தால் வந்தது மோசம்! ஆசியாவில் பிறந்தவனுக்கு அக்ரம ஆட்சி செய்யத் தான் தெரியும். இந்திய ஜனங்கள் தவித்துப் போவார்கள். அப்பேர்ப்பட்ட 'நாம்கே வாஸ்தே ராஜாங்கம்' நடத்துவதைவிட நமது பிரிட்டிஷ் பட்டாளங்களை இப்போதே அழைத்துக்கொண்டு விடலாம். நல்ல மனதோடு நமது ஸோல்ஜர்கள் திரும்பி விடட்டுமே! பிரிட்டிஷாருக்கு எப்போதாவது தங்கள் சக்தியில் சந்தேகம் வந்து விட்டதானால் பிறகு ஆளுகின்ற உரிமையையே இழந்துவிட்டவர்களாவர்" என்று சர்ச்சில் சொல்கின்றான்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் எவ்வளவோ குடியேற்ற நாடுகள் இருக்கின்றன. தென்னாப்பிரிகா, கானடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகள் அந்த இனத்தைச் சேர்ந்தவை. அங்கெல்லாம் பிரிட்டிஷ் ஆட்சி நாம்கே வாஸ்தேயாகத் தானிருக்கிறது என்பது சர்ச்சிலின் அபிப்பிராயமா? பிரிட்டிஷ் பட்டாளங்களை இப்போதே அழைத்துக்கொண்டு விடலாமென சர்ச்சில் கூறுவது வெகு ரஸமாயிருக்கிறது. குஷாலாய்ச் செய்யட்டுமே! இந்தியாவின் தற்காப்பை இந்திய வீரர்களே நன்கு கவனித்துக் கொள்வார்கள். சர்ச்சிலின் தர்மகர்த்தாக் கூட்டம் இந்தியாவைக் காக்கவேண்டாம்.

இன்னொரு இடத்தில் சர்ச்சில் சொல்கிறான்: "பிரிட்டிஷ் நீதி, பிரிட்டிஷாரின் அமைதியான ஆட்சி, முதலியவைகளை அனுபவித்துக் களித்து வந்த இந்தியப் பொது ஜனங்களுக்கு துரதிர்ஷ்டம் வந்து விட்டது போலிருக்கிறது. இந்திய ஆதிக்கத்தை இந்தியர்களிடம் விட்டு விட்டால் முஸ்லீம் ஹிந்துவை நசுக்குவான்; ஹிந்துவை முஸ்லீம் நசுக்குவான். அதுதான் பயனாகும்" என்று சர்ச்சில் ஜோஸ்யம் சொல்கின்றான். பூனைகளுக்கு அப்பத்தைப் பங்கிட்ட குரங்குக் கதையை நாம் மறக்கவில்லை. அதிகமோ, கொஞ்சமோ, பூனைகளே அப்பத்தைத் தின்று கொண்டிருந்தால் பரவாயில்லை. "தம்முட் சண்டை செய்தாலும் சகோதரரன்றோ" என்ற உணர்ச்சி ஹிந்து முஸ்லீம்களுக்குள் ஏற்பட்டு வருகிறது. ஆகவே இந்த 'மித்திரபேதம்' என்ற உபாயம் இந்தியர்களிடம் செல்லாது என்பதை சர்ச்சிலும் அவன் பாட்டன் ஜான் புல்லும் உணர்ந்து கொள்வார்களாக!

ஈக்கென்ன வேலை?

'கொல்லன் உலையில் ஈக்கென்ன வேலை?' என்று ஒரு பழமொழி யுண்டு. அந்த மாதிரி சட்ட மறுப்பு இயக்கமென்பது காந்தியடிகளும் காங்கிரசும் நடத்திய ஓர் இயக்கமாகும். அவ்வியக்கத்தை நடத்தவோ, நிறுத்தவோ சத்தியாக்கிரகிகளுக்குத் தான் உரிமையுண்டு என்பதை சொல்லத் தேவை யில்லை. ஒரு ரங்கஸ்வாமி அய்யங்காரோ, ஒரு ஹஸரத் மோகனியோ, ஒரு 'பயோனீர்' பத்திரிகையோ, ஒரு 'ஹிந்து' பத்திரிகையோ, சட்ட மறுப்பு இயக்கத்தைப் பற்றி ஆலோசனை கூறப் புகுவது, 'கொல்லன் உலையில் ஈ புகுந்த கதை' தான். ரங்கஸ்வாமி அய்யங்கார் சட்ட மறுப்பை நிறுத்த வேண்டுமென்று சொல்வதற்கு உரிமை யற்றவரென்று முன்னமே 'சங்கி'ல் எழுதினோம். வடக்கே ஹஸரத் மோகானி என்ற ஒருவர், "காந்தியடிகள் சட்ட மறுப்பை இப்போது நிறுத்தியது தப்பு" என்று ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறியிருக்கின்றார். இவர் யார் பேசுவதற்கு? சத்தியாக்கிரகத்தில் அ, ஆ தெரியாத பேர்வழிகள் சட்ட மறுப்பைப் பற்றி ஆலோசனை கூற முன் வருவதை என்னென்று கூறுவது?

'சங்கு சகாய நிதி'

நமது வேண்டுகோளுக்கிணங்க 'சங்கு நிதி'க்காகப் பணம் அனுப்புபவர்கள், மணியார்டர் அனுப்பும்போது கூபனில் இன்னதற்கு என்று குறிக்காமல் அனுப்பி விடுகிறார்கள். அதனால் சந்தேகம் ஏற்பட்டு கடிதம் எழுத வேண்டியிருக்கிறது. ஆனதால் பணம் அனுப்புகிறவர்கள் கூபனில் 'சங்கு நிதி'க்கு என்று குறிப்பிடக் கோருகிறோம்.

முன் வரவு	ரூ.	154	2	0
M. சுப்பிரமணியர், கூனூர்		5	0	0
M. வேலு செட்டியார், பெங்களூர்		1	0	0

பெண்கள் நிர்வாணமா?

நாணமும், பயிர்ப்பும் இந்தியப் பெண்களின் அணிகலன்கள். அவர்கள் உடை உடுத்துவதே ஒரு தனித் தினிசு. முக்கால் கையும், பாதி மார்பும், முழங்காலும் தோன்றும்படி மிகச் சொற்பமான உடையை அவர்கள் உடுத்துவதில்லை. அதை அவர்கள் அழகாகக் கருதாமல், ஆபாசமாகவே மதித்து வெறுக்கின்றார்கள். அவர்கள் பழகி ஊறிக்கிடக்கும் ஐதிகங்கள், இந்தப் புது மோஸ்தர்களுக்குச் சிறிதும் இடந் தருவதில்லை. மேலெல்லாம் சுற்றிச் சுற்றி அழகாய் உடுத்திருக்கும் சேலையில் ஒரு தலைப்புச் சிறிது அகன்றாலும், மானமே போய் விட்டது போல், அவர்கள் மனம் நொந்து மறுகுவார்கள்.

இப்படிப்பட்ட இந்தியப் பெண்மணிகள் புதுச்சேரி எல்லையில் படும்பாட்டைக் கேட்க, எவர் நெஞ்சமும் புண்ணுகும். சுங்க வரிச் சோதனைக்காக, அங்கே ஓர் ஆங்கிலோ இந்திய மாது இருக்கிறாளாம். அவள் இந்திய மங்கையரைச் சிறிது நேரம் வரை தனி யறையில் சேலை முழுவதும் உரிந்து நிர்வாணமாக நிறுத்தி சோதனை செய்கிறாளாம். அதுவும் ஏகாந்தமாகச் செய்வதில்லையாம். வேறு பல பெண்களுக்கு முன்னே இவ்வாறு செய்கிறாளாம். என்ன வெட்கக் கேடு!

இந்தக் காரியத்தைச் செய்ய,ஒரு பெண்ணும் முன் வருவாளோ? இந்தியப் பெண்களின் உணர்ச்சியை அறியாத ஒருத்திதான் இதற்குத் துணிவாள். உடம்பில் முக்கால் பாகம் தெரிய உடை உடுத்துவதும், சில சமயங்களில் நிர்வாணமாய் நிற்பதும் வேற்று நாட்டு ஜாதியினருக்கு வெட்கமாகவோ அவமானமாகவோ தோன்றாதிருக்கலாம். ஆனால் இந்தியப் பெண்களுக்கு இந்தக் காரியம் தாளாத அவமானமாகும்.

"இந்தியப் பெண்களை இம்மாதிரி அவமானப் படுத்தலாகாது; இந்த ஆங்கிலோ இந்திய ஸ்திரீயை விலக்கி விட்டு, இந்திய மாதரின் பழக்க வழக்கங்களையும், மனோபாவத்தையும் அறிந்த வேறொருத்தியை இச் சோதனை உத்தியோகத்தில் நியமிக்க வேண்டும்" என்று விழுப்புரம் பெண்கள் சங்கத்தார் சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் இந்த மிருகத்தனமான நடவடிக்கையை உடனே மாற்றுவது தான் அறிவுடைமையாகும்.

"ஜில்லா ஹிட்லர்கள்"

மகாத்மா காந்தி லண்டனிலிருந்து திரும்பி வந்தவுடனே ஒரு பெரிய உண்மையைக் கூறினார். "உண்மையான சர்வாதிகாரி லண்டனிலுள்ள இந்தியா மந்திரி அல்ல; 250 ஜில்லாக்களிலுமுள்ள கலெக்டர்கள் தான் இந்தியாவை உண்மையில் ஆளும் சர்வாதிகாரிகள்" என்று அவர் அருளினார். கலெக்டர்கள் நினைத்தால், இந்தியாவையே ஒரு ஆட்டம் ஆட்டி வைத்து விடமுடியும். அவர்களை "ஜில்லா ஹிட்லர்கள்" என்றுகூடக் கூறலாம்.

இன்று தினம் இந்த "ஜில்லா ஹிட்லர்க"ளின் மகா நாடொன்று குளிர்ச்சியான உதக மண்டலக் குன்றின் மீது நடக்கப் போகிறதாம். 13 ஜில்லாக் கலெக்டர்கள் அதில் கலந்து கொள்வார்களாம். அவர்கள் முக்கியமாக ஆலோசிக்கப் போகும் விஷயம் என்னவோ, தெரியவில்லை. ஆனால் சட்ட மறுப்பை அடியோடு அடக்கிவிட என்னென்ன முறைகளைக் கைக் கொள்ளுவது என்ற விஷயமாக யோசித்து முடிவு செய்யப் போகிறார்களென்று ஒரு நிருபர் கூறுகிறார்.

சென்ற வருஷத்தில் அவரவர்கள் கையாண்ட வழிகளை ஒவ்வொருவரும் மற்றவருக்கு எடுத்து பரிமாறிக் கொள்ளக் கூடும். "புளியம் மிலாறுதான் மிகச் சிறந்தது" என்று ஒருவர் சொல்லலாம்; "நீண்ட மூங்கில் தடி தான் மேலானது, ஸார்" என்று இன்னொருவர் கொக்கரிக்கலாம். "துப்பாக்கிக்கு மிஞ்சியது எதுவுமில்லை" என்று மற்றொருவர் நர்த்தனம் புரியவுங்கூடும். "ரிஸர்வ் போலீஸை வரவழைத்து, ஊரைச் சுற்றிச் சுற்றி ஏழெட்டு ஊர்வலங்கள் நடத்தி விட்டால், நாம் அக்கடாவென்று தூங்கலாம்" என்று வேறொருவர் சொல்லலாம்.

தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிப்பது போல இருக்கிறது இந்த கூட்டத்தின் செய்கை. சட்ட மறுப்பு இயக்கம் தோன்றுவதற்குக் காரண மென்ன வென்பதைக் கூறி, குடிகளின் கஷ்டங்களைப் போக்க வழி கண்டு பிடிக்காமல், சட்ட மறுப்பை நிறுத்துவது பற்றி ஆலோசிப்பது என்ன மூளையோ தெரியவில்லை. தேசத்திலுள்ள அதிருப்திதான் சட்ட மறுப்பாக வெடிக்கின்றது. அந்த அதிருப்தியைப் போக்குவதற்குப் பாடு படாமல் வேறெதையோ பற்றிப் பேசுவதற்கு இப்படி ஒரு கும்பல் கூடிப் பேச வேண்டுமோ?

ஷோக்குப் பிள்ளை போக்கு

(திப்பு எழுதியது)

வர வர வர வர நமது இளைஞர்களுக்கு 'ஷோக்'குத்தனம் தான் ஜாஸ்தியாகி வருகின்றது. தன்னை மன்மதனென எண்ணிக்கொண்டு ஒவ்வொருவனும் ஒய்யார நடை போடுகிறான். உதட்டில் வெள்ளைச் சுருட்டுத் தொங்குகிறது. குதிரை ஓடுமா, பறக்குமா வென்று அறியாதவர்கள் கூட 'ஹண்டிங் விப்' ஒன்றை வைத்துக் கொள்கிறார்கள். இந்த உஷ்ண தேசத்தில் மொச மொசவென்று கம்பிளிச் சட்டைகளையும், நீல ஸர்ஜுகளையும் போட்டுக் கொண்டு ஊர் சுற்றுகிறார்கள். வைக்கோல் வழியாகக் காப்பி உறிஞ்சினால்தான் ருசியா யிருக்குதென்கிறார்கள். மோட்டார்க்கார்களுடைய குலம், கோத்ரம் இவைகளைப் பற்றியே ஆராய்ச்சி நடத்துகிறார்கள். "கிரீடா கார்போவை விட சுலோசனா மூஞ்சி ஷோக்குத்தான்" என்று சினிமா தேவிகளை வர்ணிக்கிறார்கள். எதற்கெடுத்தாலும், 'ஸ்டைல்' என்கிறார்கள். உட்காருவதில் 'ஸ்டைல்', நடப்பதில் 'ஸ்டைல்', தின்பதில் சொகுசு, பேசுங் குரலிலும் புது மோஸ்தர், இப்படியாக எல்லா விதத்திலும் 'ஷோக்'குத்தனம் ததும்பி யிருக்கிறது. இது ஓர் வர்க்கம்.

குதிரைப் பந்தயம், பருத்தி (சட்டா)ப் பந்தயம், டெர்பி ஸ்வீப், சாம்பெயின் பானம், போதாதென்றால் விலை மாதர் வீடு இவ்வாறுகக் காசைக் கரைக்கும் லீலைகளை யெல்லாம் கண்டறிந்து அதிலேயே திளைந்து கொண்டிருக்கும் வர்க்கமொன்றும் இருந்து வருகிறது. கஷ்டப்பட்டு, வயிற்றை வாயைக் கட்டி அப்பனோ, மாமனோ சம்பாதித்து வைத்த காசுகளை யெல்லாம் பூவாணம் விட்டு விடுகிறார்கள். ஆரோக்கியம் கெடுகிறது; காசு கரைகிறது; எல்லாவற்றையும் விட குலத்தின் பெயர் அழிந்து போகிறது.

"தந்தை மகற் காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்லெனும் சொல்"

என்று யாரோ ஒரு மைலாப்பூர் நெசவாளி எழுதிப் போனானாம். தற்காலத்திலுள்ள சில நாகரிகப் பிண்டங்களைக் கண்டால், "இவனை எவனடா பெற்றான்?" என்றே கண்டோர் கூறுவதுண்டு. குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிகளாக அநேக ஜன்மங்கள் ஷோக்கிலேயே அழுந்திக் கிடக்கின்றன. உலகமெல்லாம் தன்னை மெச்சுவதாக எண்ணிக்கொண்டு இந்த இளைஞர்கள் ஆடம்பரம் செய்கின்றனர். ஆனால் அந்த ஒவ்வொருவரையும் பின் புறத்தில் அனைவரும் ஏளனம் செய்து சிரிப்பது அவர்கள் காதில் விழுவதில்லை. யாராவது நல்ல புத்தி சொன்னாலும் காதில் ஏறுவதில்லை. 'ஷோக்கு', காதைச் செவிடாக்கும் போலும்! நேரே படுகுழி யிருப்பதை அறிந்தும் ஷோக்கிலேயே ஈடுபட்டிருப்பதால் இந்தக் கூட்டத்தைக் 'குருட்டுக் கூட்டம்' என்றும் கூப்பிடலாம். இந்த உதவாக்கரைக் கூட்ட மிருப்பதால் தேசத்துக்கு சர்வ நஷ்டம். நாட்டின் காசெல்லாம் பிற நாட்டுக்கு அனுப்பி விடுபவர்கள் இவர்கள்தான். தேசத்துக்கு அவமானமும் இவர்களால் தான். இப்படியாகத் தானும் கெட்டு, தேசத்தையும் கெடுத்து, தன் குலப் பெயரையும் கெடுக்கும் கூட்டத்தை யார் சீர் திருத்துவது? முக்கால்வாசி 'மைனர்கள்' உற்றார் உறவினர், பெற்றார், பெரியோர், பேச்சையும் கேட்பவர்களல்ல. ஆகவே இவர்களை அரசாங்கம்தான் கவனிக்கவேண்டும்.

'தனி மனிதனுடைய சுதந்திரத்தில் தலையிடலாகாதென' சர்க்கார் தட்டிக் கழித்தால், கடைசியில் நாடு கட்டாயமாய்ப் பாழாகி விடுமன்றோ! ஏதோ நல்ல சகுனம் மாதிரி ஹைதராபாத் நிஜாம் தமது ராஜதானிக்குட்பட்ட உயர் குடும்ப வாலிபர்களுக்கு ஓர் எச்சரிக்கையை விடுத்திருக்கிறார். அந்த அறிக்கை கூறுவதாவது :—

"சில உயர் குடும்ப இளைஞர்கள் வீண் ஆடம்பர போகங்களில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவை அவர்களுடைய நற்குண நன்னடத்தைக்கே கேடு சூழக் கூடியவை. அது மாத்திரமல்ல. அவர்களுடைய மூதாதைகளுடைய நற் பெயருக்கும் இவற்றால் ஊனம் விளைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசன் தனி மனிதர்களுடைய சொந்தக் காரியங்களில் தலையிடக் கூடாதுதான். ஆனால், கௌரவம் வாய்ந்த புராதனக் குடும்பங்களையே நாசம் செய்து விடக்கூடிய ஒரு கேட்டைக் கண்டு சும்மா விருக்கலாமா? இந்தக் குடும்பங்களின் பெரியோர் இவ் விஷயத்தை உடனே கவனித்து, வழி தவறிய வாலிபர்களைச் சீர்திருத்துவார்களாக. இவ்வாறு எச்சரிப்பது அரசாங்கத்தின் கடமையே யாகும்"

ஸபாஷ் நிஜாம் அவர்களே! ஸலாம் ஆலேகும்! நிற்க, செத்த பாம்பை அடிப்பதுபோல மீண்டும் இந்த ஷோக்கு இளைஞர்களைப்பற்றி வர்ணிக்க, நான் விரும்பவில்லை.

மகாத்மாவே! நீடூழி வாழ்வீராக!

(ரோமென் ரோலண்டு விடுத்துள்ள செய்தி)

"உலகம் பூராவும் இப்பொழுது குரூரத்திலும் ஹிம்சைப் புத்தியிலும் ஆழ்ந்து கிடக்கின்றது. என்ன பரிதாபகரமான நிலைமை! இதற்கு முன் நடந்த யுத்தங்களை விடக் கொடூரமான மகா யுத்தம் ஒன்று வாசற்படியில் காத்துக் கொண்டு நிற்கிறது. எந்த நிமிஷத்தில் புகுந்திடுமோ? மனித வர்க்கம் இரண்டு பிரிவாகப் பிரிந்து கிடக்கிறது. நசுக்குகிறவர்கள்; நசுக்கப் படுபவர்கள் என்று இரண்டு கக்ஷிகள் உள. தங்களுக்குத்தான் பலம் இருக்கின்றதென்ற வெறியினால் தேசங்களை ஆள்பவர்கள் தங்கள் குடிகளை நசுக்கி வருகின்றனர். இந்த சமயத்தில் ஓ மகாத்மாவே! உலக சமாதானத்துக்காகவும், நீதிக்காகவும், சத்தியத்துக்காகவும் தாங்கள் ஆத்மத் தியாகத்தி லீடுபடுகின்றீர்கள். தங்கள் தியாகத்தை ஏசுநாதரின் தியாகத்தோடுதான் ஒப்பிடலாம். அவ்வளவு புனிதம் தங்கள் தியாகத்துக்கும் உண்டு. தங்கள் தியாகம் விலைமதிக்க வொண்ணாதது.

"பகவான் ஏசுவைச் சிலுவையில் அறைந்த பின்னரும், இவ்வுலகம் இன்னும் சீரடைந்தபாடில்லை. அக்காலத்தில் துர்ப்பாக்கியவான்களான, கோடிக் கணக்கான ஏழை மக்களின் இருளைப் போக்க ஏசுநாதர் தியாகம் செய்தார். அதே மாதிரி தாங்களும் தங்கள் உயிரைத் தியாகம் செய்ய வேண்டுமோ என்னவோ யார் கண்டது?

"மகாத்மாவே! தாங்கள் வெகு காலம் வாழ வேண்டுமென நான் பிரார்த்திக்கின்றேன். வியாதியஸ்தனாகிய நான் உலகில் நெடுங் காலம் வாழ மாட்டேன். ஆனால் கடவுள் கிருபையால் தாங்கள் மட்டும் தீர்க்காயுளாக உலகில் வாழ வேண்டும். இந்தியாவிலுள்ள தங்கள் சகோதரர்களையும், சகோதரிகளையும், ஏன் உலகத்திலுள்ள எல்லா மனித வர்க்கத்தையும் காப்பாற்றுவதற்காக நீங்கள் நீண்ட ஆயுள் வாழ்வீராக! இந்த நெருக்கடியான சமயத்தில் உலகத்துக்கு நீங்கள் அத்தியாவசியமானவரன்றோ!"

என்றும் தங்கள் ஆசிர்வாதம் விரும்பும்,
ரோமேன் ரோலண்டு.

தவத்திலும் சுதேசி ஞாபகம்

பர்னகுடியில் உபவாசம் கிடக்கும் ஐயன் காந்திக்குச் சிறிதும் மனச் சோர்வே யில்லை. உடம்பிலும் எவ்விதச் சிக்கலும் ஏற்படவில்லை. ஆயினும் நாளுக்கு நாள் நிறையில் மட்டில் அரைப் பவுண்டு வீதம் குறைந்து வருகிறது. கடைசியாகக் கிடைத்த செய்தியின்படி அவர் நிறை 91 பவுண்டுக்கு வந்திருக்கிறது.

19-ம் தேதி காலை மகாதேவ தேசாய் விடுதலை யடையப் போகிறார் என்ற செய்தியைக் கேட்டதும், "யார் அவரைச் சிறை வாயிலில் வரவேற்கப் போகிறார்கள்? எட்டு மணிக்கு விடுதலை யானால், ஏழரை மணிக்கே போய் நின்று வரவேற்கச் செல்லுங்கள்" என்று காந்திஜி கட்டளை யிட்டுவிட்டார்.

பிரஞ்சு நாட்டில் தரையிலிருந்து வெட்டியெடுத்த விச்சி ஜலம் உட்கொண்டது மகாத்மாஜிக்கு நல்ல தெம்பு தந்தது. ஆனால், அது சுதேசி ஜலம் அல்லவே. "உங்கள் தொந்தரை பொறுக்காமலே, இதைப் பருக இசைந்தேன். இதற்குப் பதில் சுதேசி ஜலம் ஏதாவது கொடுங்கள்" என்று காந்திஜி டாக்டர்களை வற்புறுத்திக் கொண்டே யிருந்தார். இப்பொழுது "விச்சி" ஜலத்துக்குப் பதில் "சிம்ஹகடா"க் கோட்டையில் ஊறும் ஊற்று ஜலத்தைக் கொடுத்து வருகிறார்கள். ஐயனின் சுதேசிப் பற்று யாருக்கு வரும்?

மகாத்மாவைத் தரிசிக்க வேண்டுமென்று சிலர் இந்தியாவின் பல திசைகளினின்றும் பட்டினியோடு யாத்திரையாக பூனாவுக்கு வந்து பர்ணக்குடி வாசலில் தொந்தரவு செய்கிறார்கள். இத்தகைய 'பித்தம்' வேண்டாமென தேவி சரோஜினி எச்சரிக்கை செய்து வருகிறாள்.

ஹரிஜனப் பள்ளிக்கூடம்

தென்னாற்காடு ஜில்லா கள்ளக்குறிச்சியில் காதி ஆசிரமத்தின் ஆதரவில் ஒரு ஹரிஜனப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதில் இலவசமாகத் தங்குவதற்கும், சாப்பிடுவதற்கும் வசதிகள் ஏற்படுத்தி யிருக்கின்றார்களாம்.

சேரிகளில் எலக்டிரிக் விளக்கு

மதுரை ஹரிஜன சேவா சங்கத்தார்களின் வேண்டுகோளின் பேரில் மதுரை முனிசிபாலிட்டியார் சேரிகளுக்கு சாத்தியமான விடத்தில் காந்த விளக்குகளும் போடுவதென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

ஹரிஜனக் கைத்தொழிற் காட்சி

ராஜாஜியின் செய்தி

ஐயன் தவங் கிடக்கும் பர்னகுடியிலிருந்து சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் நமது காரியாலயத்தில் நடக்கும் கைத்தொழிற் காட்சிக்கு அனுப்பியிருச்கும் செய்தி வருமாறு :—

“நாங்கள் காந்திஜீ தவத்தின் வது நாளைக் கழித்துக் கொண்டிருக்கிறோம். மகாத்மாஜீயின் உடல் நிலை திருப்திகரமாகவே யிருக்கிறது என்று டாக்டர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். என்றாலும், தேசம் பிரார்த்தனை புரிவதை நிறுத்தி ஒய்ந்துவிடக் கூடாது. வரும் வாரத்தில் தான் நாம் கூர்ந்த கவலையோடு, உருகி உளங்கனிந்த பிரார்த்தனை புரிய வேண்டும். ஹரிஜனச் சிறுவர்களுக்குப் பணி புரிவதே, மிகச் சிறந்த பிரார்த்தனையாகும்.”

டாக்டர் ராஜன் செய்தி

திருச்சி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அனுப்பியிருக்கும் செய்தியாவது :—

“உலகத்திலேயே மிகப் பெரியோரான மகான் உபவாசம் புரிந்து, தவங் கிடக்கிறார். இதைவிட உயர்ந்த செய்தி உண்டா? கடவுளை மறந்து போன நாஸ்திக உலகத்தைத் திணறும்படி காந்தியடிகளின் தவம் செய்து விட்டது; ஹரிஜன இயக்கத்துக்கு நிச்சயமாக புது வேகத்தையும் அது உண்டாக்கி விட்டது. பூனாவில் பர்ண குடியில் எந்த இயக்கத்திற்காக காந்திஜீ சத்தியாக்கிரகம் புரிந்து கொண்டிருக்கிறாரோ அவ்வியக்கத்திற்குத் தாங்கள் புரிந்து கொண்டிருக்கும் சேவையில் ஹரிஜனக் குழந்தைகளின் கைத்தொழிற் காட்சி, ஓர் பிரத்தியட்ச உதாரணமாக விளங்குமாக. காந்திஜீயின் ஆசிமொழிகள் உங்களுக்குக் கிட்ட வேண்டு மென்பதே எனது பிரார்த்தனை.”

ஹரிஜனச் சிறுவர் கைத்தொழிற்

பொருட்காட்சி

இன்று கடைசி நாள்

மாலை 4 மணி முதல் 7 மணி வரையில்

சங்கு காரியாலயத்து மாடியில்

பிரவேசக் கட்டணம் கிடையாது.
அனைவரும் விஜயம் செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அனைவரும் வருக!

மகாத்மாவின் உபவாஸ காலமாகிய இந்த மூன்று வாரத்திலும் சென்னையில் அநேக விதமான கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. சேரிக்குச் சேரி சென்று ஏழைகளுக்கு உணவளிக்கப்படுகிறது. நகரின் பல பாகங்களிலும் ஹரிஜன இயக்கத்தைப் பற்றிக் பொதுக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இவ்வளவுக்கும் பொதுஜன ஆதரவு மிகுதியாகிக் கொண்டே வருவதைக் காண சந்தோஷப்படுகின்றோம்.

இவ்வளவு கொண்டாட்டங்களிலும் மிக்க ருசிகரமான கொண்டாட்டம் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் 19, 20ம் தேதிகளில் நடைபெற்றது. கோடம்பாக்கம், அடையாறு போன்ற தொலை தூரத்தினின்றும் சுமார் 150 ஹரிஜனச் சிறுவர்களும் சிறுமிகளும் அங்கு வந்து அநேக விளையாட்டுகளைக் காட்டினார்கள். கழிக் கவாத்து (Pole Drill), மனித கோபுரங்கள் (Pyramids), பாணா வீச்சு (Lathi Play), தீவட்டி ஆட்டம், கத்திச் சண்டை முதலிய கஷ்டமான பல ஆட்டங்களில் பால் மணம் மாறாச் சின்னஞ்சிறு குழந்தைகளும் பங்கு எடுத்துக் கொண்டன. ஹரிஜனச் சிறுமியர் அழகாகப் பாட்டுப்பாடி அபிநயத்தோடு கும்மியடித்து, கோலாட்டமிட்டு, பொது ஜனங்கள் மனதை மகிழுறச் செய்தனர். அன்று ஐந்தலைத் தீபமொன்றை நெற்றியில் நிறுத்தி ஒருவர் காட்டிய வித்தையைப் புகழாதவர் இல்லை.

இன்று நமது சுதந்திரச் சங்கு காரியாலயத்தின் மெத்தையில் ஹரிஜனச் சிறுவர்களால் கைத்தொழிற் காட்சி யொன்று நடைபெற்று வருகிறது. பிரவேசக் கட்டணம் ஏதுமில்லை. தாழ்த்தப்பட்ட ஜாதியினரென்று ஒதுக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தும் ஹரிஜனக் குழந்தைகள் எவ்வளவு கெட்டிக்காரத்தனம் உடையவை என்பதை மேற்படி காட்சி நிரூபிக்கும். ஆகவே அனைவரும் கட்டாயம் வந்து மேற்படி காட்சி சாலையைக் கண்டு செல்லவேண்டும்.

மேற்படி கொண்டாட்டங்களை நடத்துவதற்குக் காரணமாகிய அடையாறு நண்பர்கள் ஸ்ரீயுத கிருஷ்ணன், கிருஷ்ணசாமி முதலியவர்களுக்கும் சகோதரி சுந்தரம் போன்றவர்களுக்கும், இதர உபாத்தியாயர்கட்கும் நன்றி காட்ட நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

துண்டு துணுக்குகள்

மூன்றெழுத்து வேண்டுமாம்

உள்ளூர்த் தச்சன் செய்த யானைக் குட்டி வேண்டாம்; அமெரிக்காவில் செய்த விசை ரயில் வண்டி வேண்டுமென்று குழந்தை கேட்கிறது. திருப்பூரில் நெய்த அழகான சேலை வேண்டாம்; லங்காஷயரில் உற்பத்தியான டோரியாச் சிட்டி வேண்டு மென்கிறாள் யுவதி. திண்டுக்கல்லில் தைத்த செருப்பு வேண்டாம்; கானடாவில் செய்த பூட்ஸ் வேண்டும் என்கிறான் வாலிபன். இதெல்லாம் இல்லாவிட்டால், நாகரிக வாழ்க்கை நடக்காதாம். என்னே இவர்களின் அந்நியப் பித்தம்! இப்பொழுது திருச்சியில் கூடிய தமிழ்ப் பண்டிதர்களும் "பண்டிதர்", "வித்வான்" முதலிய பட்டங்களில் வெறுப்புக் கொண்டு விட்டார்கள். அவர்களுக்கு "பி. ஒ. எல்" என்ற பட்டம் வேண்டுமாம். அதற்கு ஒரு தீர்மானமும் செய்திருக்கிறார்களாம். ஆங்கிலத்தில் உழலுவோருக்கு எழுத்து மோகமதிகம். தாய் நாட்டுத் தமிழ் உபாத்தியாயர்களுக்குமா இப்படி மதி புரள வேண்டும்? "பண்டிதர்" என்றால் எவ்வளவு நன்றா யிருக்கிறது! அர்த்தமும் இருக்கிறது. "பி. ஒ. எல்." என்ற மூன்று ஆங்கில எழுத்தில் என்ன இருக்கிறது? அட! கலி காலக் கூத்தே!

மடாதிபதிகளே!

இங்கிலாந்தில் ஏழைகள் வசிக்கும் சில இடங்கள் மிக்க ஆபாசமா யிருக்கின்றனவாம். அந்த இடங்களைச் சீர்திருத்தி சுத்தமான வீடுகளைக் கட்டித் தரவேண்டுமென காண்டர்பரி ஆர்ச் பிஷப், யார்க் பாதிரியார் போன்ற மதாசாரியார்கள் ஒரு பெரிய இயக்கத்தை ஆரம்பித்திருக்கின்றனர். இந்தியாவில் உள்ள சேரிகளைப் போல அவ்வளவு ஆபாசமான பிரதேசம் இங்கிலாந்தில் எங்குமே கிடையாது. ஆயினும் அங்கு ஏழைகளுக்கு விடுகட்டித் தருவதில் மதாசாரியர்கள் சிரத்தை கொண்டிருக்கின்றனர். ஆனால் நரகத்தைப்போன்ற சேரிகளையுடைய இந்தியாவிலோ மடாதிபதிகளும் மதாசிரியர்களும் வேதாந்தம் பேசுவதிலேயே காலங் கழித்து வருகின்றனர். 'உடலெல்லாம் கோயிலென உலவும் தெய்வம்' என்ற கருத்தைச் சுவடியோடு புதைத்து விட்டனர். இங்கிலாந்திலுள்ள மத குருக்களைப்போல பொதுஜன க்ஷேமத்துக்கான முயற்சிகளில் நமது மடாதிபதிகள் என்றைக்கு ஈடுபடுவார்களோ?

பகடைக்காய் போல

"இந்தியத் துணித் தொழில் செத்துப் போய்க் கொண்டிருக்கிறது. ஜப்பானியப் போட்டியினின்று இதைக் காப்பாற்றுவாரில்லையா? உலகத்து ராஜீயத்தில் இந்தியாவை பகடைக் காயாக நினைத்து இஷ்டப்படி குலுக்கிப் போடுகிறார்கள். இந்தியத் துரைத்தனம் ஜப்பான் சர்க்காரின் வார்த்தைகட்கு வசமாகி விட்டது. ஆகவே இந்தியத் தொழிலுக்குப் போதிய பாதுகாப்புக் கிட்டவில்லை" என்று எச். பி. மோடி பம்பாயில் ஒரு கூட்டத்தில் பேசி யிருக்கின்றார். மிஸ்டர் மோடி, மிதவாதிகளிலும் மிதவாதியாவார். சர்க்கார் தாஸர்களுள் ஒன்னும் நம்பர் பேர்வழி யென்றும் சொல்லலாம். அப்பேர்ப்பட்டவரே இந்திய துரைத்தனத்தைக் குற்றம் சொல்லுகிறாரென்றால் வேறு வியாக்கியானம் வேண்டுமோ?

ஒரு வார்த்தைக்கு நாலு கோர்ட்டு!

சட்டம் ஒரு கழுதை என்பார்கள். அதனால் தான், "ஆமாம்", "அல்ல" என்று ஒரே வார்த்தையான பதில்களைப் பெறுவதற்கு நாலு கோர்ட்டு ஏற வேண்டியதாயிற்று. "ஒரு மகம்மதியர் தன் மனைவியை அடிக்க உரிமையுண்டா?" இதுதான் ஒரு வழக்கில் கேள்வி. டாக்கா முன்சீப்பு "உரிமையில்லை" என்று தீர்ப்புச் செய்தார். புருஷன் அப்பீல் செய்தான். ஸப் ஜட்ஜி, "இலேசாக அடிக்க முஸ்லீம் சட்டத்தில் இட மிருக்கிறது" என்று முடிவு சொன்னார். மனைவி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தாள். ஜஸ்டிஸ் மூக்கர்ஜி, ஸப் ஜட்ஜி தீர்ப்பைத் தள்ளி விட்டார். அதற்கு மேலே கணவன் லெட்டர்ஸ் பேடண்டு அப்பீல் செய்தார். அதில் அடிக்கக் கூடாதென்றே முடிவான தீர்ப்பாயிற்று. ஆகையால், முகம்மதியக் கணவன் தன் மனைவியை அடிக்கக் கூடாதென்று நிர்ணயமாகி விட்டதாக இப்பொழுது தோன்றுகிறது. ஆனால், பிரிவி கவுன்ஸில் ஒன்று பாக்கி யிருக்கிறதல்லவா?

—'அமிர்த பஜார்'.

தெய்வ சொத்து ஏலம்!

பக்தர்கள் சோற்றுக்குத் தாளம் போடும் பொழுது, கோயிலையும் குளத்தையும் பற்றி யார் கவனிக்கின்றார்கள்? விவசாயிகள் வரி செலுத்த முடியாமல் தவிக்கிறார்கள். இந்தப் பாழும் நிலத்தைக் கட்டிக்கொண்டு யார் அழுவது என்று அவர்கள், வழி தெரியாமல் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில், தஞ்சை ஜில்லாவில் கோயில் நிலங்களெல்லாம் வரி பாக்கிக்காக ஜப்தி செய்யப்படுகின்றன வாம். கோயில்களைப் பற்றிக் கவலை யெடுத்துக் கொள்ள ஆட்களில்லை யென்று தானே இதன் அர்த்தம்?

மேலத் திருமதிக் குன்னம் காளியாயி, மாரி யாத்தாள் நிலமெல்லாம் ஜப்தி! அதம்பாவூர் வில்வநாத சுவாமி நிலமும் ஜப்தி! பில்லூர் நட ராஜப் பெருமான் புலமும் ஜப்தி! இவற்றோடு போயிற்றா? திருச்செங்காட்டாங்குடிக் கோயி லின் 200 ஏகர் நிலங்களை ஜப்தி செய்து ஏலமும் போட்டு சர்க்காரே ஏலமெடுத்துக் கொண்டார் களாம். நிலங்களின் பெறுமானம் 6000 ரூபா யாம். கிஸ்தி பாக்கியோ ரூ. 1200 அதாவது சொத்து மதிப்பில் ஆறிலொரு பங்குக்குமேல் வரிச்சுமை கனத்திருக்கிறது. தங்கள் தங்கள் நிலைமையே தத்தளிப்பா யிருக்கும் பொழுது, யார் இந்தப் பணத்தைக் கொட்டி யழுவார்கள்? ஏலம் எடுக்கவும் யாரும் முன் வரவில்லையாம். சர்க்காரே, 6000 ரூபாய் நிலத்தையும் ஒன்றே கால் ரூபாய்க்கு ஏலமெடுத்துக் கொண்டு விட்ட தாம். கோயில் சாமியின் சொத்து பெரிய சாமி யாகிய சர்க்கார் வசம் இன்றைக்குப் போய் விட்டது.

தங்கள் வாயை வயிற்றைக் கட்டியாவது, தெய்வத்துக்குப் படைக்கத் தவறாத தென்னிந் திய விவசாயிகள், இப்படி சாமி நிலமெல்லாம் ஏலம் போக விட்டுக் கொண்டிருப்பதன் கார ணம் என்ன? தாங்க முடியாத வரிச்சுமை தான். கலம் மூன்று ரூபாய் விற்ற நெல் இன்று முக்கால் ரூபாய்க்கு வாரி யிறைகிறது. வரிச்சுமை மட்டில் தாளவில்லை. இந்தத் திக் கற்ற நிலைமையில், போனதெல்லாம் போகட்டு மென்று, விவசாயிகள் மனமுடைந்து போய் விட்டார்கள். இதைச் சர்க்கார் சாமி இப் பொழுதாவது உணர்ந்து கொள்ளப் போகி றதோ, இல்லையோ?

ராஜாவுக்கு அஞ்ஞாத வாசமா?

ஆள்வார் மகா ராஜாவுக்குத் திடீரென்று சர்க்கார் கட்டளை யொன்று வந்திருக்கிறதாம். "ஒன்று நீர் உமது ராஜ்யத்தை விட்டு வெளியே போய் இரண்டு வருஷம் வசிக்க வேண்டும்; அல்லது ஒரு கமிஷனின் விசாரணைக்கு உட் பட இணங்கவேண்டும். 48 மணி நேரத்திற் குள் பதில் தெரிவிக்கவும்" என்று அவ்வுத்தி ரவு கூறுகிறதாம். இதனால் திகைத்துத் திடுக் கிட்ட ஆள்வார் ராஜா, "இதன் காரணத்தை யாவது தெரிவியுங்களேன். திடீரென்று மறு பேச்சுக்கு இடமில்லாத உத்திரவு வந்திருக் கிறதே. இதை மாற்ற வேண்டும்" என்று வைசிராயை வேண்டி யிருக்கிறாராம். இந்த உத்திரவு சுதேச மன்னர்களிடையே பெருத்த கலக்கத்தை உண்டாக்கி யிருக்கிறது என்றும் தெரிகிறது.

ராஜாவும் தேசமும்

ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலை மாணவர்கள் கூட்டமொன்றில், "எந்த நிலைமை ஏற்பட்டா லும், நாட்டுக்காகவும் அரசனுக்காகவும் யுத்தம் செய்வதில்லை" என்று ஒரு தீர்மானம் செய் தார்கள். அந்தத் தீர்மானத்தைப் பிரரேபணை செய்த ஒரு மாணவர் கூறியதாவது:—

"ராஜா, தேசம் என்ற இரண்டும் மிக்க சாமர்த்தியமான வார்த்தைகள். உண்மை யான பிரச்சினைகளை ஜனங்கள் தெரிந்து கொள்ளாதிருப்பதற்காக, பொது ஜனங்களைக் குருடாக்குவதற்கு ஏற்பட்டவை இவ்விரு வார்த்தைகளும்! நமக்குச் சில உன்னத இலட் சியங்கள் இருக்கின்றன. ராஜாவிடமும், தேசத் திடமும் பக்தியாயிருக்க வேண்டும் என்பதற் காக, இந்த இலட்சியங்களுக்குத் துரோகமாக நாம் நடந்து கொள்ளலாமோ? யுத்தம் என்பது கேவலமானது; அசுத்தமான காரியம். அதில் நான் உயிரை விடமாட்டேன். அதைவிட, தேசத்ரோகி என்று என்னைச் சுட்டு வீழ்த்தி னாலும், அதனால் இறக்க நான் தயாராயிருக்கி றேன்."

Edited and Published by S. Subramanian
and Printed by M. R, Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.